பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 13 சனிக்கிழமை 26.04.2025 கதிர் 168

## இது ரகசியம் அல்ல!

தபால் மூல வாக்களிப்பு நடந்து கொண்டிருக்கின்றது. வாக்களித்தவர்கள், வாக்களிப்பு நிலையங்களில் இருந்தவர்களிடம் அவர்கள் யாருக்கு ☞ 2

# 5ஆம் கட்டக் கடனைப் பெற பணியாளர் மட்ட இணக்கம்

### இலங்கை அரசு - நாணய நிதியம் எட்டின

இலங்கை ஆளும்தரப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எவ்) ஆகியவற்றுக்கு இடையே நான்காம் கட்ட மீளாய்வைத் தொடர்ந்து பணியாளர் மட்ட இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று விடுத்த அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்து.

பணியாளர் ஒப்பந்தம் நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, 2.9 பில்லியன் டொலர் கடனின் ஐந்தாவது தவணையான 344 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்குக் கிடைக்கும் என்று நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் பொருளாதாரம் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளுக்குத் திரும்புவதாகவும் அறிக்கை கூறுகின்றது.

இலங்கையின் அரச வருவாய் அதிகரித்து வருவதாகவும், அதிகாரப்பூர்வ வெளிநாட்டு இருப்புக்கள் அதிகரித்து வருவதாகவும், கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் எதிர்பார்த்தபடி முன்னேறி வருவதாகவும் சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எவ்) தெரிவித்துள்ளது.

நாட்டின் கடன் மறுசீரமைப்பு நிறைவடையும் தருவாயில் உள்ளது என்றும், மிக முக்கியமாக, நாணய நிதிய நிதி திட்டத்தின் இலக்குகளை அடைவதில் இலங்கை உறுதிபூண்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உலகளாவிய வர்த்தகக் கொள்கையின் நிச்சயமற்ற தன்மை ☞ 8

## இந்திய பிரதமருடன் நேற்று 15 நிமிடங்கள் அநுர பேச்சு

இந்தியாவின் –காஷ்மீர் மாநிலம், பஹல்காமில் இடம்பெற்ற அப்பாவிச் சுற்றலாவிகள் மீதான கொடூரத் தாக்குதல் தொடர்பில் நேற்றுப் பிற்பகல் இந்தியப் பிரதமருடன் ஜனாதிபதி அநுரகுமார திசநாய்க்க தொலைபேசியில் சுமார் 15 நிமிடங்கள் பேசினார். ☞ 8

## தலதா மாளிகைக் கடமையில் சுவீனத்தால் 2 பொலிஸார் சாவு

தலதா மாளிகை யாத்திரையின்போது கடமையில் இருந்த இரண்டு சார்ஜென்ட்கள் திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்தனர் என்று காவல்துறை ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார். ☞ 8

# ஜேவிபியினர்தான் முழு இனவாதிகள் வாக்களித்தால் தமிழருக்கே பேராபத்து

### கஜேந்திரகுமார் நேற்று ஆவேசம்

இந்த ஜேவிபியினர்தான் முற்று முழுதான இனவாதிகள். இத்தகைய பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு இத்தேர்தலில் சந்தர்ப்பத்தை வழங்கினால் அது தமிழ் மக்களுக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணித் தலைவர் கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டம், கொக்குவிலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்றுச் ☞ 2



## காணி சீர்திருத்த ஆணைக்குழு மோசடி குறித்து விசாரிக்க முடிவு

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்றக் குழு (COPE- கோப்) முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கோப் குழு முன்பாக அழைக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று ஸ்ரீநுஊணசி தலைவர் டாக்டர் நிஷாந்த சமரவீர தெரிவித்தார். காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர்கள் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்களில் கோப் குழுவின் முன் வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், மோசடி மற்றும் முறைகேடுகள் குறித்து ☞ 8

### தேசபந்து மீதான விசாரணை;

## மூவர் குழுவிற்கு உதவ மேலும் பல நியமனங்கள்

பணி இடைநிறுத்தப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனது அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்தினார் என்பது தொடர்பான குற்றச்சாட்டுகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதியரசர் தலைமையிலான மூவர் குழுவிற்கு உதவ, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி வழக்கறிஞர் திலீப பீரிஸ் மற்றும் துணை சொலிசிட்டர் ஜெனரல் ராஜித பெரேரா ஆகியோர் சட்டமா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

உச்சநீதிமன்ற நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான ☞ 8

## இணைய குற்ற விசாரணைப் பிரிவு யாழ்ப்பாணத்தில் நேற்று தொடக்கம்

யாழ்ப்பாணத்தில் இணையக் குற்றவிசாரணைப் பிரிவு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் நேற்றுத் தொடக்கி வைக்கப்பட்டது.





வடக்கு மாகாணத்தில் இணையக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து வந்தன. இதனால், இணையக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகக் கொழும்புக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

இந்தவிடயம் தொடர்பில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு ☞ 8

## இளம் செய்தியாளரை இழுத்து வீசிய பொலிஸ்

இளம்பத்திரிகையாளர்கள் சங்கத்தின் (YJA) செயலாளரும் நீதிமன்ற செய்தியாளருமான ஃபஸீர், குளியாப்பிட்டி நீதிவான் மன்றத்தில் செய்தி சேகரிக்கும் போது வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஒரு தொழிலதிபரைகைது செய்தல், சித்திரவதை செய்தல் மற்றும் கொள்ளையடித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான காவல்துறை அதிகாரிகளுக்கு எதிரான வழக்கு தொடர்பான விசாரணையின்போது இந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

இது தொடர்பாக பஸீர் தெரிவித்ததாவது: நீதிமன்ற அறைக்குள் அவர் குறிப்புகள் எடுத்துக்கொண்டிருந்தபோது இரண்டு காவல்துறை அதிகாரிகள் அவரை அணுகி, அவரை வெளியே இழுத்துச் சென்று, தொடர்ந்து செய்தி வெளியிடுவதைத் தடுத்தனர்.

இளம்பத்திரிகையாளர்கள் சங்கம் இந்தச் சம்ப ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வாக்களித்தார்கள் என்று தேர்தலுக்குப் பின்பான ஒரு கருத்துக் கணிப்பு நடத்திப் பார்த்தேன். ஆச்சரியப்படும் விதத்தில் முடிவுகள் இருந்தன.

தபால் மூல வாக்களிப்பில் கலந்துகொள்பவர்கள் அரச அலுவலர்கள். நாடாளுமன்றத்தேர்தலில்இலங்கைமுழுவதும் அரச அலுவலர்கள் என்.பி.பிக்குத்தான் தமது வாக்குகளை அள்ளிப் போட்டார்கள். யாழ்ப்பாணம் உட்பட வடக்குக் கிழக்கிலும் அந்தப் போக்கின் கணிசமான பாதிப்பு இருந்தது. அரசிடம்சம்பளம்வாக்குபவர்களாக இருந்தாலும் ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்கவையும் அதற்கு முன்னர் ஆட்சியிலிருந்தவர்களையும் தூக்கிக் கடாசிவிட்டு என்பிபியினரை அதிகாரத்திற்குக் கொண்டு வரும் வெறி இந்த அரச அலுவலர்களிடம் இருந்தது.

ரணிலோ மற்றைய ஆட்சியாளர்களோ தொடர்ந்தும் பதவியில் இருந்தால் அவர்களால் தமது வேலைகளுக்கே எதிர்காலத்Oல் ஆப்பு வைக்கப்பட்டுவிடும், எல்லாவற்றையும் தனியார்மயமாக்கி தம்மையும் தமது குடும்பங்களையும் நடுத்தெருவில் விட்டுவிடுவார்கள் என்கஷிற அச்ச உளவியல் அவர்களை ஆட்டிப் படைத்திருக்கும்போலும்அதனால்வாக்குகறை அள்ளிக் குத்திவிட்டார்கள். அதே பயம் தமிழர்களிடமும் இருந்திருக்கும் போலும் அதனால் வடக்கு கிழக்கிலும் என்.பி.பிக்கு கணிசமான ஆதரவு அரச அலுவலர்கள் மத்தியில் இருந்தது. ஆனால் நேற்றுத் தொடங்கிய வாக்களிப்பில், இந்த அலையைக் காண முடியவில்லை. பெரும்பாலும் தமிழ்க் கட்சிகளுக்கே வாக்குகள் விழுந்துள்ளன.

நாடாளுமன்றத் தேர்தலில் 20க்கு 11 வாக்குகள் என்.பி.பிக்கு அரச அலுவலர்களிடம் இருந்து கிடைத்தது என்றால், இந்தத் தடவை அது 3 அல்லது 4 வாக்குகளாகக்கூட இருக்கவில்லை என்பது என்னை ஆச்சரியப்படுத்தியது. மக்கள் தெளிவாகத்தான் இருக்கிறார்கள் என்பது புரிந்தது. சில அலுவலகங்களில் என்.பி.பிக்கு வாக்குகளே விழவில்லை. அதற்காக தமிழ்கக் கட்சிகள் மீது மக்களுக்குப் பிரியம் வந்துவிட்டது என்று பொருள்கொள்ள முடியாது. அவற்றின் மீதான வெறுப்பு அப்படியேதான் இருக்கின்றது. ஆனால், என்பிபியும் இதற்கு முந்தைய ஆளும்தரப்புக்களில் இருந்து வேறானதல்ல என்கிற ஒரு புரிதல் வரத் தொடங்கியிருக்கிறது. அத்துடன் இது நாடாளுமன்றத் தேர்தல் போன்றல்ல, எமது ஊர், எங்கள் விவகாரம், எங்கள் ஆட்சி இதில் அந்நியனுக்கு என்ன வேலை என்கிற உளவியலையும் பார்க்க முடிந்தது.

இந்தக் கருத்துக் கணிப்பில் என்னை ஆச்சரியப்படுத்திய மற்றொரு விடயம், நாடாளுமன்றத் தேர்தலில் என்பிபிக்கு வாக்களித்த பலர் இந்தத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸிற்கு வாக்களித்துள்ளார்கள். என்ன டிசைனடாஇது?ஒன்றில்ஜேவிபிஇல்லையேல் காங்கிரஸ் என்பது சம்பந்தமேயில்லாத இரு துருவமுனையாகஇருக்கின்றது.இரண்டுக்கும் சம்பந்தமேயில்லையே!

பார்க்கலாம் இந்த விவகாரம் எங்கு போய் எப்படி முடியும் என்று?

.............................

இன்று இரண்டு நீதிமன்ற அவமதிப்பு பற்றிய விவரங்களைத்தான் உங்களோடு பகிர்ந்து கொள்ளப் போகின்றேன். முதலாவது திருகோணமலை நீதிமன்றத்தில் நடந்தது. தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக சிறீதரன் தெரிவு செய்யப்பட்டதை அடுத்து, அந்த மத்திய குழுவின் சட்ட அங்கீகாரத்தைக் கேள்விக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட வழக்கோடு சேர்ந்த துணை வழக்காக இந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் இருந்தது.

கனடாவிலும் இலங்கையிலும் வாழ்பவரான அகிலன் முத்துக்குமாரசாமியின் மின்னிதழ் பத்திரிகை ஒன்றில், தமிழ் அரசுக் கட்சியின் வழக்குத் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரை ஒன்றில் சுமந்திரனுக்கு அழுத்தம் தரும் வகையில் கூறிய கருத்துக்கள் நீதிமன்ற அவமதிப்புக்குரியவை என்று நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை பரிசீலித்த திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் அகிலன் முத்துக்குமாரசுவாமிக்கு எதிரான விடயத்தைதனியாகவிசாரிக்கஉத்தரவிட்டது.

நேற்றைய வழக்கு விசாரணையில் அகிலன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி,இனிமேல்இந்தவழக்கில்அகிலன் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிறிகாந்தா முன்னிலையாகிவாதாடுவார் என்றும், அதற்கு இடமளிக்கும் விதத்தில் வழக்கைபிறிதொரு திகதிக்கு ஒத்திவைக்கும்படியும் கோரினார்.

அதற்கு ஒப்புக்கொண்ட முறைபாட்டாளர் சுமந்திரன், அதேசமயம் இன்னொரு விடயத்தை நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அகிலன் முத்துக்குமாரசாமி அடிக்கடி நீதிமன்றுக்குத் தெரிவிக்காமலேயே வெளிநாட்டுக்குச் சென்று வருகின்றார் என்பதை நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இனிமேல் அப்படிச் செல்லவதாயின் நீதிமன்றத்திடம் அனுமதி பெற்ற பின்னரே செல்லவேண்டும் என்ற கட்டளையைப் பிறப்பிக்கும்படி நீதிமன்றிடம் கோரினார்.

நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. இனிமேல் எதிராளி நாட்டை விட்டு வெளியே செல்வதாயின் அது குறித்து நீதிமன்றுக்கு விண்ணப்பித்து, முன்அனுமதி பெறவேண்டும். அத்தகைய அனுமதிபெறுவதற்கானகோரிக்கைதொடர்பில் முறைப்பாட்டாளருக்கும் முன்கூட்டியே தகவல் தரவேண்டும் என்று நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதற்கிடையில் இந்த விவகாரத்தை இழுத்தடிக்காமல் ஏதோ ஒரு விதத்தில் முடிவுக்குக் கொண்டுவரும் சாத்தியம் இல்லையா என்றும் நீதிபதி சுமந்திரனிடம் வினவினார்.

பதிலளித்த சுமந்திரன், இது குறித்து அகிலனே தன்னிடம் நேரடியாக வந்து பேசினார் என்றும், நீதிமன்றத்தில் தான் பகிரங்க மன்னிப்புக் கேட்டால் இந்த வழக்கை முடிவுக்குக் கொண்டுவரமுடியுமா என்பது குறித்து ஆலோசித்தார் என்றும் நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அப்படிப் பகிரங்க மன்னிப்புக் கேட்கப்பட்டால் அதனடிப்படையில் வழக்கை முடிவுறுத்தத் தான் தயாராக இருப்பார் என்று நீதிமன்றத்திற்கு அறிவிப்பதற்குத் தயார் என்று அகிலனுக்குத் தான் சொல்லியிருக்கிறார் என்றும் ஆனால் இன்று அப்படியொரு ஆலோசனை இருப்பதைப் போல எதிராளி நடந்துகொள்ளவில்லை என்றும் சுமந்திரன் மேலும் தெரிவித்தார். இதனை அடுத்து இந்த விடயத்தை எதிராளியான அகிலன் முத்துக்குமாரசாமி சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து வருமாறு தெரிவித்து வழக்கை சற்று நேரத்துக்கு ஒத்திவைத்தார் நீதிபதி.

வழக்கு மீண்டும் அழைக்கப்பட்டபோது, அப்போது அகிலன் முத்துக்குமாரசாமி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி தனது கட்சிக்காரர்மன்றில்பகிரங்கமன்னிப்புக்கேட்டு இந்த விடயத்தை முவுறுத்த விரும்புகின்றார் என்று நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

எதிராளி தமது தவறுக்கு நீதிமன்றில் பகிரங்க மன்னிப்புக் கோருவதால் இந்த விடயத்தை இத்துடன் முடிவுறுத்தவும், நீதிமன்ற அவமதிப்பு விவகாரம் தொடர்பில் அவர் மீது தொடர் நடவடிக்கை எடுக்காமல் கைவிடும் படியும் நீதிமன்றுக்குப் பணிவான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்றேன் என்றார் சுமந்திரன்.

இதையடுத்து இந்த விடயத்தை இத்தோடு முடிவுறுத்த நீதிமன்றம் அனுமதிக்கின்றது. ஆயினும்,இத்தகையமன்னிப்புகோரப்பட்டமை பற்றியசெய்தியைஎதிராளிதமதுபத்திரிகையில் ஒரு வாரத்துக்குள் வெளியிடவேண்டும் - என்று கட்டளையிட்டார் நீதிபதி.

சுமந்திரனும் அகிலனும் தமிழ் அரசுக் கட்சிக்குள் எதிரெதிர் அணியில் இருந்தவர்கள். சுமந்திரனை கட்சிக்குள் தோற்கடித்து சிறீதரனை வெற்றிபெறச் செய்வதில் முழு மூச்சாகச் செயற்பட்டவர். கடைசியில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து பிரிந்து சுயேச்சையாகப் போட்டியிட்ட அணியினருடன், ஜனநாயகத் தமிழ் அரசு என்று பெயரில் சேர்ந்தியங்கிய காரணத்தால் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து வெளியேறியவர்.

இது ஒரு நீதிமன்ற அவமதிப்பு வழக்கு என்றால்,மற்றொருநீதிமன்றஅவமதிப்புவழக்கு பணி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரானது. இந்த வழக்கில் தேசபந்து நீதிமன்ற அவமதிப்பில்ஈடுபட்டார்என்பதைஉறுதிப்படுத்தி கட்டளையிட்ட நீதிவான், எனினும் நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்திலேயே தாக்கல் செய்யவேண்டும் என்பதால் இந்த வழக்கை அங்கு தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டார்.

பொலிஸ் அலுவலர் பொலிஸாராலேயே சுட்டுக்கொல்லப்பட்ட வழக்குத் தொடர்பில் பல நாள்களாக தலைமறைவாகி இருந்த தேசபந்து பின்னர் நீதிமன்றில் சரணடைந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். ஏப்ரல் 10 அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது.

டிசம்பர் 31, 2023 அன்று வெலிகமவில் உள்ள டபிள்யூ15 (ந்15) சொகுசு விடுத்திக்கு அருகில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜென்ட் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு இது.

தென்னகோன் பிணையில் வெளியேறும்போது, அவரது பாதுகாப்புக் கருதி வாகனத்தை நீதிமன்ற வளாகத்திற்கு உள்ளேகொண்டுவந்துஅவரைஏற்றிச்செல்ல அனுமதிக்குமாறு தேசபந்துவின் சட்டத்தரணி நீதிமன்றிடம் விண்ணப்பித்திருந்தார். ஆனால் அந்தக் கோரிக்கைகளை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை.

இருந்தாலும் நீதிமன்றத்தில் இருந்து வெளியேறிய தேசபந்து வாகனத்தை உள்ளே வரவழைத்து அதில் ஏறியே சென்றார். இது நீதிமன்ற உத்தரவை மீறி நீதிமன்றை அவமதித்த குற்றச்சாட்டாகப் பதிவு செய்யப்பட்டது.

இது பற்றி நீதிமன்றத்தில் நேற்று சமர்ப்பணம் -முன்வைத்த சொலிஸிட்டர் ஜெனரல் பீரிஸ்,

'ஏப்ரல் 10, இந்த நீதிமன்றத்தில் தேசபந்து தென்னக்கோனின் பிணை தொடர்பான உத்தரவை நீங்கள் பிறப்பித்தீர்கள். அப்போது, சந்தேகநபர்களுக்காக ஆஜரான ஜனாதிபதி வழக்கறிஞர் ஷனக ரணசிங்க பிரதான சந்தேகநபர் நீதிமன்றத்தை விட்டு வெளியேறும்போதுஅவருக்குசிறப்புபாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் கோரினார். வாகனத்தைஉள்ளேகொண்டுவரவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். அந்த கோரிக்கைகளை நிராகரித்து நீங்கள் ஒரு உத்தரவை பிறப்பித்தீர்கள். அந்த உத்தரவை எழுதிய பேனாவின் மை காய்வதற்கு முன்பே இந்த சந்தேகநபர்கள் அந்த உத்தரவை மீறினார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் அளித்த இந்தப் பகுதிக்குப் பொறுப்பான டிஐஜி, தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதால் பாதுகாப்பு கோரியதாக அன்று நான் உங்கள் முன் கூறினேன். எனவே, இந்த பிரதான சந்தேகநபரைசமூகத்திற்குவிடுவிக்கக்கூடாது, தொடர்ந்து மறியலில் வைக்கவேண்டும் என்று நான் கூறினேன். இருப்பினும், அவருக்குப் பிணை வழங்கப்பட்டது. அந்த பிணை உத்தரவை நாங்கள் திருத்துவோம் என்று நம்புகிறோம்" என்றார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் சந்தேகநபரான தேசபந்து தென்னகோன் மற்றும் அவரது மோட்டார் வாகன சாரதி ரோஷன் லக்ஷித கருணாரத்ன ஆகியோர் நேற்று நீதிமன்றத்தின் அழைப்பின் பேரில் முன்னிலையாகி இருந்தனர்.

இருவரும் காலை 9.00 மணியளவில் மாத்தறை நீதவான் நீதிமன்றத்திற்கு மோட்டார் வாகனத்தில் வந்து, உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, வழக்கம் போல் நீதிமன்றத்திற்குள் நுழைந்து, பிற்பகல் 2.15 மணி வரை நீதிமன்ற அறையில் ஓர் இருக்கையில் அமர்ந்தனர்.

அதன் பின்னர் வழக்கு விசாரணை நடந்தது. குற்றச்சாட்டுக்களை தேசபந்து தரப்பு மறுக்கவில்லை. நீதிமன்றம் உத்தரவிட்ட சமயத்தில் தேசபந்து தடுத்து வைக்கப்பட்டிருந்ததால் அந்த விவரம் அவருக்குத்தெரியவில்லைஎன்றும்வெள்ளை நிற வாகனம் ஏற்கனவே வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததால் அவர் அதில் ஏறிச் சென்றார் என்றும் அதனாலேயே இந்தத் தவறுநடந்ததாகவும்நீதிமன்றைஅவமதிக்கும் எண்ணம் எதுவும் தமது கட்சிக்காரருக்கு இல்லைஎன்றும்நீதிமன்றத்திடம்தெரிவித்தார். தவறுக்காக மன்னிப்புக் கேட்கிறார் என்றும் தெரிவித்தார்.

இருப்பினும் நீதிமன்ற வளாகத்திற்குள் வாகனத்துடன் நுழையவோ அல்லது எந்த பாதுகாப்புப் பணியாளர்களையும் பயன்படுத்தவோ கூடாது என்ற தெளிவான அறிவுறுத்தல்கள் இருந்தபோதிலும் அதனை மீறி ஒரு தனியார் வாகனத்தைக் கொண்டு வந்ததாக நீதிமன்றம் உறுதிப்படுத்துகிறது, இதன் விளைவாக, தென்னகோனுக்கு எதிராக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் அவமதிப்பு குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்யுமாறு நீதிபதி சட்டமா அதிபருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜேவிபியினர்தான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையின் தெற்கில் மட்டுமல்லாது வடக்கு கிழக்கிலும் தாங்கள்தான் பெரிய கட்சி என்றும் தமக்கே தமிழ் மக்களும் ஆணை வழங்கி உள்ளதாகவும் ஜேவிபியினர் தம்பட்டம் அடித்து வருகின்றனர்.

உண்மையில் வடகிழக்கிலுள்ள 19 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 8 பேரே ஜேவிபியினர். ஏனையவர்களில் தமிழ் அரசுக் கட்சி 8 பேர் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி 1 சுயேச்சைகுழு 1 என்றவாறாகவே ஆசனங்கள் உள்ளன.

இவ்வாறிருக்கையில் எதனடிப்படையில் தாம்தான் பெரிய கட்சி என்றும் தமக்கே மக்கள் ஆணை வழங்கி உள்ளனர் எனவும் ஜேவிபியினர் கூறுகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

இதனை உள்ளூரிலும் சர்வதேச மட்டத்திலும்கூடத் தெரிவித்து வருகின்றனர். எனவே இந்த பொய்ப் பரப்புரையையும் ஜேவிபியின் ஏமாற்று தனங்களையும் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும். மேலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசிய நிலைப்பாடோடு அவர்கள் இப்போது இல்லை எனவும் கூறிவருகின்றனர்.

அவர்களுக்கு சமஷ்டியோ சுயாட்சியோ அவசியமில்லை என்றும் அவர்களை சமத்துவமாக கருதினால் இலங்கையர் என்ற அடையாளத்துடன் அவர்கள் வாழ்வார்கள் என்றவாறும் பேசி வருகின்றனர்.

அதேபோன்ற கடந்த காலங்களில் ஆட்சி செய்த கட்சிகள் ஊழல் நிறைந்த இனவாதத்துடன் செயற்பட்டதாலே தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுக்க முடியவில்லை. ஆனால் நாம் ஊழல், இனவாதம் இல்லாத ஒரு கட்சியாகவே செயற்பட்டு வருவதால் எமக்கு தமிழ் மக்களும் ஆதரவை வழங்கி வருகின்றனர் என்றும் கூறத் தலைப்படுகின்றனர். இப்படி இனமத பாகுபாடு பார்க்காதவர்கள் என்றால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தேவைகள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை இன்னமும் ஏன் நிறைவேற்றவில்லை? தாம் வழங்கியவாககுறுதிகளைதாமேநிறைவேற்ற தெரியாதவர்கள், உண்மையில் இன மத வேறுபாடு பார்க்காதவர்கள் என்றால் யார் ஆட்சிக்கு வந்தாலும் நிதியைக் கொடுப்பதில் என்ன பிரச்சினை இருக்கிறது. ஆளும்தரப்பு என்றவுடன் மக்களை அச்சுறுத்தி மிரட்டல் விடுவதா இவர்களது அரசியல் மாற்றம் எனக் கேட்கிறோம்.

என்பிபி என்று சொல்லுகிற ஜேவிபியின் கதைகள் பேச்சுக்கள் செயற்பாடுகள் எல்லலாமே முழுப் பூசணிக்காயை சேற்றில் புதைப்பது போன்ற ஏமாற்று வித்தைகள்தான்.

தாங்கள் இனவாதம் இல்லை என்றும் இனவாதம் பேசுவதற்கு இடமில்லை எனவும் கூறுகின்ற இந்த ஜேவிபியினர்தான் முற்று முழுதானஇனவாதிகள்.இவர்கள்பெயரளவிலே இனவாதமில்லை என செல்லிக்கொண்டு இருந்தாலும் எல்லாவற்றிலும் இனவாதம் கொண்டவர்கள் இந்த ஜேவிபியினர்தான்.

சின்னச்சின்ன விடயங்களுக்குகூட தமிழ் தேசியம் பேசும் கட்சிகள்தான் இனவாதத்தை தூண்டுவதாகச் சொல்லும் இவர்கள், தமிழ் மக்களது பல்வேறு பிரச்சினைகளுக்கும் ஏன் தீர்வை வழங்க முடியாது இருக்கின்றனர்?

ஒருபக்கம்நீங்கள்தான்பெரியகட்சிஎன்றால் தையிட்டிவிகாரை போன்ற இனவாதமில்லாத சின்ன சின்ன பிரச்சினைகளுக்கு இனவாதம் இல்லாமல் தீரவை வழங்கலாமே. ஏன் தீர்வு தர முடியவில்லை? உங்களிடம் இனவாதம் இல்லை என்றால் முதலில் தையிட்டி விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வை கொடுக்க நீங்கள் தயாரா என நாம் சவால் விடுக்கிறோம்?

ஆக மொத்தத்தில் தமிழ் மக்களின். ஒவ்வொரு பிரச்சினைக்களையும் தீர்க்க முடியவில்லை என்பதால் இந்தப் பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து இனவாதம் என்று பெயரைச் சூட்டிக்கொண்டு தட்டிக் கழித்துவிட்டு கடந்து செல்ல பார்க்கின்றனர்.

உண்மையில் இனவாதம் என்றால் சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக எதுவும் செய்யாமல் இருப்பதுதான் இனவாதம். இனவாதம் இல்லை என உதட்டளவில் மேடைகளில் கூறிக்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# மக்களை அலைக்கழிக்கும் உள்ளூராட்சி செயலாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

## ஆளுநர் நா.வேதநாயகன் அதிரடி

ஒருசில உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் மக்களை அலைக்கழிப்பதை, பழிவாங்குவதை நிறுத்தாவிடின் எதிர்காலத்தில் அவர்களுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுத்து தண்டனையை வழங்குவதைத்தவிர வேறுவழியில்லை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் எச்சரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களுடனான ஏப்ரல் மாதத்துக்கான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ஆளுனர்-

தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றபோதும் இங்கு எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது மந்தமாக இருக்கின்றது. இதற்கும் அப்பால் சில உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தொடர்பில் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே பதவிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனை மறந்து சில உள்ளூராட்சி மன்றங்கள் செயற்படுகின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் சிலவற்றின் செயலர்கள் இழைக்கின்ற தவறுகளால் ஒட்டுமொத்தமாக எல்லோருக்குமே பாதிப்பு ஏற்படுகின்றது.

எமது நிர்வாகக்கட்டமைப்பிலிருக்கின்ற இவர்களின் தவறுகளுக்காக பாதிக்கப்பட்ட மக்களிடம் எனது மனவருத்தத்தை வெளிப்படுத்தியிருக்கிறேன். முன்னைய ஆட்சிக் காலங்களில் எமது மாகாணத்தில்



முதலீடு செய்வதற்கு முன்வந்த பலர் பல்வேறு காரணங்களால் குறிப்பாக இலஞ்சம் கோரியமையால் திரும்பிச் சென்றனர். அவர்கள் இப்போதும் மீண்டும் வருகின்றனர். அவர்களுக்குரிய ஒழுங்குகளை நேரிய சிந்தனையுடன் அதிகாரிகள் செய்துகொடுக்கவேண்டும் என ஆளுனர் குறிப்பிட்டார்.

கடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களின் முன்னேற்றம் தொடர்பில் ஆளுநர் இதன் பின்னர் ஆராய்ந்தார். விவசாய உற்பத்திப் பொருள்களுக்கான 10 சதவீதக் கழிவு தொடர்பான விவகாரத்தில் ஒவ்வொரு சந்தையாக நடவடிக்கை எடுக்க தீர்மானித்திருப்பதாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் குறிப்பிட்டார்.

அந்தச் சந்தையுடன் தொடர்புடைய விவசாய அமைப்புக்களை முதல் கட்டமாக சந்திக்கவுள்ளதாகத் தெரிவித்தார். வீதிகளில் குப்பைகள் போடும் செயற்பாடு தொடர்கின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சி.சி.ரி.வி. கமெராக்களை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.

சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தயக்கம் காண்பிக்கும் நிலைமை காணப்படுவதாக ஆளுநர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் சட்டவிரோத கட்டுமானங்களை உள்ளூராட்சி மன்றங்கள் நேரடியாக இடித்தழிக்கக் கூடியதாக இருந்ததாகவும் தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டினுள் உள்ளமையால் தம்மால் வழக்குத் தாக்கல் செய்யக் கூடியதே ஒரே வழி எனக் குறிப்பிட்டனர்.

இதன்போது தொடரப்பட்ட பல வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளன எனவும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக யாழ். மாநகர சபையால் சட்டவிரோத கட்டடங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு பின்னர் யாழ். மாநகர சபையாலேயே வழக்கு மீளப் பெறப்பட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன என ஆணையாளர் குறிப்பிட்டார்.

அவ்வாறு மீளப்பெறப்பட்ட வழக்குகள் தொடர்பில் தனித்தனியாக ஆராய்ந்து மீளவும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார். அதேபோல வெள்ளவாய்க்கால்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் சட்டவிரோதமானவையே. அதனை அகற்றுவதற்கான தொடர் நடவடிக்கை உள்ளூராட்சி மன்றங்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

மேலும், இந்த விடயங்களில் உள்ளூராட்சி மன்றங்களால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார். மரம் நடுகையை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் ஊக்குவித்து செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆளுநர் வலியுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து வடக்கின் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் கட்டட அனுமதி, ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அவற்றில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை என்பன தொடர்பில் ஆராயப்பட்டன. இவற்றுக்கான அனுமதி வழங்குவதில் உள்ள தாமதங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அவற்றைக் களைவதற்கு தொடர்புடைய திணைக்களங்களை எதிர்காலத்தில் அழைத்து ஆராயவும் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா நகர சபை மாநகர சபையாக தரம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் அதற்குரிய ஆளணிகள் வழங்குவது மற்றும் கட்டடங்கள் அமைப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

மேலும், வீதிப் போக்குவரத்துத் தொடர்பில் கடந்த கூட்டத்தில் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் அது தொடர்பில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உள்ளூராட்சி மன்றங்களின் செயலர்கள் தெரிவித்தனர். அதேபோல நகர அபிவிருத்தி அதிகார சபையுடனான விவகாரங்களிலும் முன்னேற்றம் உள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் மூத்த உதவிச் செயலாளர், ஒவ்வொரு மாவட்டங்களினதும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரியாவிடை நிகழ்வு

(அபு அலா)






கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மோட்டார் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்து, கட்டடங்கள் மற்றும் நிர்மாணம், வீடமைப்பு, கிராமிய மின்சாரம் மற்றும் நீர்வழங்கள் அமைச்சின் செயலாளராக கடமையாற்றி வந்த எம்.எம்.நஸீரின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சில் இடம்பெற்ற இந்த பிரியாவிடை நிகழ்வில் கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் பங்கேற்று ஓய்வு பெற்றுச் செல்லும் செயலாளர் எம்.எம்.நஸீருக்கு பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் மற்றும் வாழ்த்துமடல் பரிசுப் பொருள்களை வழங்கி வைத்தனர்.

தனது 60 வயதை பூர்த்தி செய்து ஓய்வு பெற்றுச் செல்லும் இவர், கிழக்கு மாகாணத்தில் மாகாண விவசாய, கூட்டுறவு அமைச்சின் செயலாளராகவும், பேரவைச் செயலக செயலாளராகவும், பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) போன்ற பதவிகளை வகித்தமை குறிப்பிடத்தக்கது.



# அறக்கொட்டியான் தாக்கத்தை கட்டுப்படுத்த திணைக்கள அறிவுறுதல்களைப் பின்பற்றுக



கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவப்புழு என்று சொல்லப்படுகின்ற அறக்கொட்டியான் புழுவின் தாக்கம் அதிகரித்து வருவதால் விவசாயிகள் கட்டுப்படுத்த விவசாய திணைக்களத்தின் அறிவுறுத்தல்களை பின்பற்றி கட்டுப்படுத்த முன் வரவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் சோதிலட்சுமி விஜயராசா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே குறித்த விடயத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தில் 12000 இற்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்கின்ற நிலையில் அறக்கொட்டியான் புழுவின் தாக்கம் மாவட்டத்தின் பல பகுதிகளில் காணப்படுகின்ற நிலையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக விவசாய போதனாசிரியர்கள் மற்றும் பாடவிதான உத்தியோகத்தர்கள் செயற்பட்டு வருகின்ற நிலையில் குறித்த புழுவை கட்டுப்படுத்த விவசாய திணைக்கள மற்றும் போதனாசிரியர்களின் அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு தெரிவித்தார். 316

காலைக்கதிர்
Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# எப்போது தீர்வு?

ஏப்ரல் 24, கிழக்கு மாகாணம் திருகோணமலை மாவட்டம், குறிஞ்சாக்கேணி பாலம் அருகே கடலில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் தண்ணீரில் மூழ்கி உயிரிழந்தார். இந்தநிகழ்வு, இலங்கையில்வருடந்தோறும் தொடர்ச்சியாக நிகழ்ந்து வரும் தவறுதலான நீர்நிலை உயிரிழப்புக்களின் ஒரு நுட்பமான எடுத்துக்காட்டு மட்டுமே. கவனக் குறைவும், பாதுகாப்பு அறிவின் பற்றாக்குறையும், அரசின் மறுப்புப் பார்வையும் இணைந்தே இவ்வகை உயிரிழப்புகளை தொடர்ந்து நிகழ்த்தி வருகின்றன.

அமைப்புசாரா தரவுகளின்படி 2024இல், தண்ணீரில் தவறுதலாக மூழ்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 700ஐ நெருங்கியதாக உள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் குழந்தைகள் மற்றும் இளம் வயதினராவர். கடற்கரைகள், நீர்த்தடைகள், ஆறுகள், நீர்த்தேக்கங்கள் போன்ற பகுதிகளில் பாதுகாப்பு அடையாளங்கள், மீட்புப் பணியாளர்கள், எச்சரிக்கை குறிகாட்டிகள் என்பவை பெரும்பாலும் இல்லாத நிலையிலேயே மக்கள் நீராடுவதும், தண்ணீரில் விளையாடுவதும் வழக்கமாகிவிட்டது.

பள்ளிவாசல், கோவில், கல்லூரி விடுமுறைகள் ஆகியவற்றில், பெற்றோர்கள் மற்றும் சிறுவர் கவனிப்பாளர்கள்விழிப்புடன் இருப்பது அவசியமாகிறது. அவசர நிலைகளில் தொடர்பு கொள்ளக்கூடிய எண்கள், மீட்புக் கருவிகள் போன்றவை அந்நியமாக உள்ள சூழல், விபத்துகளின் வாய்ப்புகளை பல மடங்கு அதிகரிக்கின்றன.

இந்த நிலையில், ஆளும்தரப்புக்குப் பல நிலைகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொறுப்பு உண்டு. முதற்கட்டமாக, கடற்கரைகளிலும்பொதுநீர்வளங்களிலும் பாதுகாப்பு சின்னங்கள், எச்சரிக்கை பலகைகள் நிறுவப்படவேண்டும். பாடசாலைகளில் இருந்து தொடங்கி பொதுமக்கள் மத்தியில், நீரியல் பாதுகாப்பு (ழழிமிளஷ விழிகூழளமிதீ) குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படவேண்டும். மேலும், உள்ளூர் நிர்வாகங்களை வழிநடத்தி, மக்கள் அதிகம் கூடும் நீர்நிலைகள் பகுதியில் தற்காலிக காவல் பணியாளர்களையும் அமைக்கலாம். நீச்சலை பாடசாலைகளிலேயே கட்டயமாக்கவேண்டும்.

சிறுவர்களின் உயிரிழப்பு சமூகத்துக்கு ஒரு பெரும் இழப்பாக மட்டுமல்ல; அது நாம் ஒருங்கிணைந்த சமூகப் பொறுப்பிலிருந்து தவறியுள்ள விடயத்தையும் எடுத்துக்காட்டுகிறது. குறிஞ்சாக்கேணி போல பல பாலங்களின் கீழ் அல்லது அருகிலுள்ள கடல் பகுதிகளில் மக்கள் நீராடும் போது பாதுகாப்பற்ற சூழல்கள் எழுகின்றன. இதில் அரசு, பெற்றோர், சமூக அமைப்புகள் என அனைவரும் தங்கள் பங்கினை உணர வேண்டும்.

நீர் என்பது வாழ்விற்கே அத்தியாவசியமான ஒன்று. ஆனால் அதேநேரத்தில், அது உயிரைக் கேட்கும் சக்தியும் கொண்டது. ஆகவே, பாதுகாப்புடன் நீரின் அருகே செல்வது என்பது, ஒவ்வொரு குடிமகனுக்கும் கடமை மட்டுமல்ல, சமூக பொறுப்பாகவும் மாறவேண்டும்.

# தமிழ் மொழி மூல சித்த மருத்துவக் கற்கையை யாழ். பல்கலைக்கழகத்தில் மாற்றவேகூடாது

## ஆறு. திருமுருகன் வேண்டுகோள்



யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம்இது ஆபத்தானது . எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப்பாதுகாப்பதற்காக சித்தமருத்துவ பீட கற்கை நெறி தமிழ்மொழியில் தொடரவேண்டும் இதனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் உறுதிப்படுத்த வேண்டும்என அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம்பலசான்றோர். பெருமக்களின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது.

எமது பிரதேசப் பல்கலைக்கழகம் எமது பிரதேச சுதேசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் பெரும் கடமையாகும். எமது சுதேசிய மருத்துவப் பாரம்பரியம் பேணிப்பாதுகாப்பதற்காக யாழ் பல்கலைக் கழக கல்விச் சமூகம் 70 களின் பிற்பகுதியில் எடுத்த முயற்சியின் விளைவாக சித்தமருத்துவத்துறை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில்பேராசிரியர்.வித்தியானந்தன் அவர்கள் அயராத முயற்சியால் சித்த மருத்துவ நூல்கள் ஏடுகள் சேகரிக்கப்பட்டு பாரம்பரிய வைத்தியர்களிடம் ஆலோசனை பெற்று பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இத்துறை ஆரம்பிக்கப்பட்டது.

இணுவில், வட்டுக்கோட்டை ,சில்லாலை, ஏழாலைபருத்தித்துறை, அளவெட்டி போன்ற ஊர்களில் இருந்து சித்த வைத்தியர்களின் நூல்கள், உதவிகள் பெறப்பட்டன. பல்கலைக் கழக நூலகர் முருகவேள், பதிவாளர் சிவராஜா போன்ற பெருமக்கள். சித்த மருத்துவத் துறைக்கான வளர்ச்சியில் அருந்துணை செய்துள்ளனர்.

சித்த மருத்துவ பீடம் முற்றுமுழுதாக சுதேசிய வைத்தியப் பாரம்பரியத்தை சிறப்பாக வளர்த்தெடுத்துள்ளார்கள். மேலும் கைதடியிலுள்ள சித்தவைத்திய போதனா வைத்தியசாலையின் வளச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள் பல நூறு சித்த மருத்துவர்களை தொடர்ந்து உருவாக்கியுள்ளார்கள்.

துறை சார் விரிவுரையாளர்கள் பட்டப் பின்படிப்புகளைமேற்கொண்டுஇன்றுநிபுணத் துவம் வாய்ந்தவர்களாக விளங்குகிறார்கள்.

சகல கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் தமிழ்மொழி மூலம் சிறப்பாக நடைபெறுகின்றன. நீண்ட காலமாக எடுத்த முயற்சியின் பயனாக சித்த மருத்துவத் துறை தனிப்பீடமாக உயர்வுபெற்றுள்ளது மேலும் சித்தமருத்துவபீடம் விஸ்தரிப்பதற்காக புதிய நிலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் உயர்கல்வி அமைச்சு யாழ் பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறையை ஆங்கிலமொழி மூலமான கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு திட்டமிடுவதாக அறிகிறோம். இது ஆபத்தானது.

இதுபாரம்பரியசித்தமருத்துவத்துறையை அருகிப்போகச் செய்யும் முயற்சியாகும். அகத்தியர் பதினெண் சித்தர்கள்,திருமூலர், திருக்குறள், பரராஜசேகரம் போன்ற மூல நூல்களை மொழி பெயர்ப்ப தென்பது முடியாத விடயம்.

இதை அனைவரும் அறிவர். இந் நிலையில் சித்த மருத்துவத்தை ஆங்கில மொழியில் எவ்வாறு கற்பிக்கப் போகிறார்கள் ? இவ் விடயம் தொடர்பாக யாழ் பல்கலைக்கழக மூதவை ,பேரவை மற்றும் துறைசார்ந்த அறிஞர்கள்விழிப்புடன்செயற்படவேண்டும்.

எக்காரணம் கொண்டும் தமிழ் மொழி மூல கற்பித்தலை மாற்றம் செய்யக் கூடாது. இதனையும் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவிற்கு யாழ் பல்கலைக்கழக சமூகம் தெளிவுபடுத்த வேண்டும். - என்றுள்ளது.

# கொடிகாமம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் பல லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா மீட்பு

(சுபேசன்)

கொடிகாமம் இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வியாழக்கிழமை காலை கிளாலிப் பகுதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றினுள் 10 லட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கிளாலிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றிற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் இருந்தே மேற்படி இரண்டு கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தினர் அதனைப் பளைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.



இதன்போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ள நிலையில் அது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முன்னெடுத்துவருகின்றனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

# பிரதேச செயலக வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியில் தமிழர்; வாழும் பிரதேசங்களுக்குப் பாரபட்சம்

## கணபதி கனகராஜ் சாடல்



(கேதீஸ்)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் இன மத பேதமற்ற முறையில் சகல மக்களையும் நோக்குவதாக கூறுகின்றது. ஆனால் இவ்வருடம் பிரதேச செயலக வாரியாக ஒதுக்கப்பட்ட நிதியில் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு பாரபட்சமாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்கள் காணப்பட்டன. அது தற்போது 7 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. அந்தவகையில் நோர்வூட் மற்றும் தலவாக்கலை பிரதேச செயலகங்களே புதிதாக உருவாக்கப்பட்டுள்ள பிரதேச செயலகங்களாகும். ஆனால் நிதி ஒதுக்கீட்டை மையப்படுத்தி ஹங்குரான்கெத்த, வலப்பனை, கொத்மலை ஆகிய பிரதேசங்களில் தலா இரண்டு பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீட்டுக்காக காட்டப்பட்டிருக்கிறது. இந்த வகையில் நுவரெலியா மாவட்டத்திற்கு இவ்வாண்டு 92 மில்லியன் ரூபாகள் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் ஹங்குராங்கெத்த பிரதேச செயலக பிரிவுக்கு 25 மில்லியன், வலப்பனை பிரதேச செயலக பிரிவுக்கு 23 மில்லியன், கொத்மலை பிரதேச செயலக பிரிவுக்கு 18 மில்லியன், அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவுக்கு 6 மில்லியன், நோர்வூட் பிரதேச செயலக பிரிவுக்கு 7 மில்லியன், நுவரெலிய பிரதேச செயலகப் பிரிவுக்கு 7 மில்லியன், தலவாக்கலை பிரதேச செயலக பிரிவுக்கு 6 மில்லியன் ரூபா என்ற வகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் எந்த ஆட்சி வந்தாலும், பாரபட்ச மற்ற முறையில் நடந்து கொள்வோம் என்று சொன்னாலும், அனைவரும் சமம் என்று முழங்கினாலும் அது மேடைகளுடனேயே மட்டுப்படுத்தப்படும் என்பதற்கு நுவரெலியா மாவட்ட நிதி ஒதுக்கீடு ஒரு நல்ல உதாரணமாகும்.

மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கும் அவர்களுக்காக பேரம் பேசுவதற்கும் மலையகத் தளத்திலிருந்து உருவாகி அவர்களை உண்மையாக நேசிக்கின்ற இன உணர்வுள்ள தமிழ் கட்சிகளுக்கே பொறுப்பும் கடமையும் இருக்கிறது. இதை மக்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டும்.

ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் எமது மக்களை மதித்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வார்கள் என எதிர்பார்க்கக் கூடாது எதிர்பார்க்கவும் முடியாது. எமது இனத்தை சார்ந்தவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தி அதன் மூலம் பேரம் பேசும் ஆற்றலை உருவாக்கிக் கொண்டால் மட்டுமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டில் நடந்ததும் அது தான். மலையகத் தமிழ் சமூகம் அரசியல் ஏமாளிகளாக இருந்து விடக்கூடாது. எம்மிடையே ஒற்றுமை இல்லை என்பதை ஏற்றுக் கொள்ளக் கூடியது தான். அதற்காக குள்ளநரி கூட்டுக்குள் நாம் அடைக்கலம் புகுந்து விட முடியாது. எதிர் வருகின்ற உள்ளூராட்சி மன்ற தேர்தல் நமது சமூகத்தின் ஒற்றுமையை எடுத்துக்காட்டுவதாக அமைய வேண்டும். தமிழர்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற சகல உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை மீண்டும் நாம் கைப்பற்ற வேண்டும் எனவும் கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# குடிநிலம் கிராமத்தில் முதல் மக்கள் சந்திப்பு

(சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபையில் சுயேச்சை குழு வண்டில் சின்னம் சார்பில் போட்டியிடும் தலைமை வேட்பாளர் சு.சசிகுமார் மிகவும் பின்தங்கிய குடிநிலம் கிராமமக்களுடன் முதல் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நேற்று முன்தினம் நடாத்தினார்.

எதிர்பாராத மழையையும் பொருட்படுத்தாமல், மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

அங்கு வேட்பாளர் சு.சசிகுமார் பேசுகையில் -

மாற்றத்தை நோக்கிய பயணத்தில் உங்கள் ஒவ்வொரு ஆதரவும் எங்களுக்குப் பெரிய மையமாக உள்ளது.

என்றும், எதிலும், மக்களின் பூரண ஆதரவு எமக்கு வேண்டும்.

வண்டில் சின்னம், இம்முறை மக்களின் பேராதரவுடன் அமோக வெற்றியை ஈட்டும் என்பதில் எங்களுக்குச் சிறிதும் ஐயமில்லை.

எனவே திருக்கோவில் பிரதேச சபையை கைப்பற்றும் அதேவேளை பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுக்க உள்ளோம். வெற்றி நிச்சயம்.

எனவே அனைவரும் வெற்றியின் பங்காளராகுங்கள். - என்றார்.

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# உள்ளாட்சி தேர்தல் 2025

## முஸ்லிம்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இஸ்ரேலுக்கு ஆதரவு வழங்குவதற்குச் சமம்

### இம்ரான் எம்.பி. சுட்டிக்காட்டு

(ஹஸ்பர்)

முஸ்லிம் மக்கள் திசைகாட்டிக்கு வாக்களிப்பது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமாகும் என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று(வெள்ளிக்கிழமை) மாலை இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அங்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

இந்த அரசாங்கம் இஸ்ரேலைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக முஸ்லிம்கள் மீது அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது. இஸ்ரேலின் மனிதாபிமானமற்ற செயலைக் கண்டித்து ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞர் ருஸ்தியை பயங்கவரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்தமை இதற்கு நல்ல உதாரணமாகும்.

இஸ்ரேலியர்கள் இலங்கையில் அவர்களது சமயத்தலங்கைளை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ள அரசாங்கம் அதற்கு அரச பாதுகாப்பை வழங்கி வருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது சரியான பதில் கொடுக்க முடியாது. அரசாங்கம் மழுப்பிய விடயம் நம் அனைவருக்கும் தெரியும்.

பொத்துவில் அறுகம்பேயில் யூதர்கள் பாலர் பாடசாலை நடத்த அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளதோடு அதற்காக 5 இக்கும் மேற்பட்டோருக்கு நீண்ட நாள் விசா வழங்கி வருகின்றது. இதனால் அவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி உள்ளார்கள். இவர்களது பாதுகாப்பைக் காரணம் காட்டித் தான் பொத்துவில் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் கைது செய்யப்பட்டமை அனைவருக்கும் நினைவில் இருக்கும்.

அருகம்பே பகுதியில் பாலர் பாடசால நடத்துகிறோம் என்ற போர்வையில் யூதர்கள் நிரந்தரமாக ஏன் தங்கி உள்ளார்கள் என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இங்கிருந்து முஸ்லிம்களுக்கெதிரான சதித் திட்டம் ஏதும் தீட்டப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது

இலங்கையில் உள்ள சட்டத்தின்படி தனியார் எவரும் இலங்கை பாடத்திட்டத்தைப் போதிக்கின்ற தனியார் பாடசாலை நடத்த முடியாது. ஆனால் அருகம்பேயில் பாலர் பாடசாலை நடத்த யூதர்களுக்கு



அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இஸ்ரேலியர்கள் என்றால் சட்ட திட்டம் பார்க்கப்படாது என்பதற்கு இது நல்ல உதாரணமாகும்.

இந்த அரசாங்கம் இஸ்ரேலர்களைப் போசித்து பராமரிக்கும் அளவுக்கு முஸ்லிம்களுக்கு எதிராக அடக்கு முறைகளைப் பிரயோகித்து வருகின்றது என்பதை நாம் இவற்றிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகின்றது.

எனவே இந்த அரசாங்கத்துக்கு வாக்களிப்பதானது முஸ்லிம் மக்களை ஈவிரக்கமின்றி கொன்று குவிக்கும் இஸ்ரேலை ஆதரிப்பதற்கு சமமானது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார்.

## நகர அபிவிருத்தி அதிகார சபையின் உப அலுவலகம் வவுனியாவில் தேவை

### எமது ஆட்சியில் நடவடிக்கை என்கிறார் சுயேச்சை வேட்பாளர் கிரிதரன்



மாநகரசபையின் ஆட்சி அதிகாரம் எங்களுக்கு வழங்கப் பட்டால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உப அலுவலகம் ஒன்றை வவுனியாவில் இயங்கச் செய்வதற்கானநடவடிக்கை எடுக்கப்படும் என்று சுயேச்சைக் குழு ஒன்றில் கோடாலிச்சின்னத்தில்போட்டியிடும் வேட்பாளரான சி.கிரிதரன் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

இதுவரை காலமும் நகரசபையை பல்வேறு கட்சிகள் ஆட்சி செய்திருந்தது. அவர்கள் செய்யத் தவறிய பல விடயங்கள் உள்ளன. நான் நகரசபையில் சுகாதார பரிசோதகராகப் பணியாற்றிய போது பல்வேறு பிரச்சனைகள் இருந்தன. அவற்றை நேரடியாகவே நாங்கள் அவதானித்திருந்தோம்.

அந்தவகையில் கழிவகற்றல் செயற்பாடுகளில்பலமுறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. குறிப்பாக கணவன் மனைவி ஆகிய இருவரும் அரச ஊழியர்களாக இருந்தால் அவர்கள்பணிக்குசென்றுவிடுவார்கள். அதன் பின்னர்கழிவகற்றும்வாகனங்கள் செல்வதால் வீட்டில் யாருமில்லாத நிலையில்கழிவுகளைஅகற்றமுடியாத நிலைமை இருந்தது.

இருப்பினும்எம்மால்முடிந்தவரை அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுத்திருந்தேன். எனவே தற்போது சபையின் ஆட்சி எமக்கு கிடைத்தால் அதற்கான நிரந்தரமான ஒரு தீர்வினை எடுப்போம்.

அத்துடன் மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதிகளை பெறுவதில் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதி .ர்நோக்குகின்றனர். நகர அபிவிருத்தி அதிகாரசபையே அந்த அனுமதியை வழங்குகின்றது. அந்த அலுவலகம் தற்போது யாழ்பாணத்திலேயே அமைந்துள்ளது.

மாதத்தில் சிலதடவைகள் மாத்திரே அவர்கள் இங்கு வருவார்கள். இதனால் பொதுமக்கள் தமது சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க வேண்டியுள்ளது. எனவே இந்தத் தேர்தலில் மக்கள் எமக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்கினால் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் உப அலுவலகம் ஒன்றை வவுனியாவில் திறப்பதற்கானகவனத்தைஎடுப்போம். - என்றார். 100

## கடற்றொழில், விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை யாழ். பாசையூரில் மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள்

### அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிப்பு





யாழ். பாசையூரில் கடற்றொழில், விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அமைச்சர், யாழ். பாசையூருக்கு நேற்று (வெள்ளிக்கிழமை) கண்காணிப்பு பயணம் மேற்கொண்டார்.

பாசையூர் மீன் சந்தைக்கு சென்று அதனை பார்வையிட்டதன் பின்னர், இறங்குதுறைக்கும் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டார். அத்துடன், பாசையூர் கடற்றொழில்சங்கத்துடனும் கலந்துரையாடினார்.

கடற்றொழிலாளர்கள் மற்றும் மக்களால் உட்கட்டமைப்பு மேம்பாடுகள் தொடர்பில் அமைச்சரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.



அதன்பின்னர் பாசையூரிலுள்ள சென்.அன்ரனிஸ்மைதானத்துக்கும் அமைச்சர் சென்றிருந்தார். மைதானத்தை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியையும் வழங்கினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

# உள்ளாட்சி என்பதையும் தாண்டி இதை இனத்தின் தேர்தலாகக் கருதவேண்டும்

(அபு அலா,,துஷாரா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சிக்கு மூன்று நாடாளுமன்ற பிரதிநிதிகள் கிடைக்கப்பெறுவதற்கான ஆணையை எமது மாவட்ட மக்கள் வழங்கினார்கள். அதன் மூலம் எமது மக்களுடைய பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான வழி வகைகளை எமது கட்சியும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மிகச் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றதென மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அதேபோன்று எமது மட்டுமாநகர சபைக்குட்பட்ட மக்களின் தேவைகளையும், குறைபாடுகளையும் தீர்க்கும் முயற்சிகளையும் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றெண்ணி, உங்களது சீலாமுனை வட்டாரத்தில் இளம் துடிப்புள்ள ஒருவரான சுதர்சனை எமது கட்சி களமிறங்கியுள்ளது. அவரை வெற்றிபெறச் செய்து உங்களின் பிரதேச தேவைகளை நிவர்த்தி செய்யகொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழரசுக் கட்சியின் 11 ஆம் வட்டார சீலாமுனை, பெரிய உப்போடை மற்றும் சின்ன உப்போடை வேட்பாளர் த.நடராசா சுதர்சன் தலைமையில் (24) சீலாமுனையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டு. மாவட்டத்திலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு ஆணையை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றார்கள். ஏனென்றால் மாநகர சபையில் அதிகளவான வளங்கள் காணப்படுகின்றது. கடந்த 2023 ஆம் ஆண்டு மாநகர சபையினுடைய ஆட்சிக்காலம் முடிவடைந்ததன் பின்னர் சபைக்குள் இருந்த பல நிதிகளை, முன்னாள் ராஜாங்க அமைச்சர்களாக இருந்த பிள்ளையான் போன்றோர் கையாடல்களை செய்திருந்தார்கள்.

அதுமாத்திரமல்லாமல், மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் பல வளங்களை எடுத்து பல சட்ட விரோதமான செயல்களும் நடந்து இருக்கின்றது. இந்த விடயங்களில், கடந்த 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாநகர சபைக்குள் இருந்த இலங்கை தமிழரசு கட்சி சேர்ந்த உறுப்பினர்கள் மிக நேர்மையாக செயல்பட்டார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.



குறிப்பாக, சீலாமுனை பகுதியின் ஆற்றங்கரையோரத்தை ஒரு சுற்றுலாத்தலமாக அபிவிருத்தி செய்வதான சிறந்த முன்மொழிவுகளை எமது வட்டார வேட்பாளர்கள் தெரிவு செய்திருக்கின்றார்கள். இவற்றை நடைமுறைக்கு கொண்டு வந்தால் மாநகர சபை எல்லைக்குள் வருமானங்களை அதிகரிக்கக்கூடிய சில திட்டங்களாக அவற்றை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

அந்தவகையில், இந்தத் தேர்தல் வட்டாரத் தேர்தலையும் தாண்டி, தமிழ் இனத்திற்கான ஒரு தேர்தலாக கருத்தில் எடுத்து இலங்கை தமிழரசுக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

## இனப் பாகுபாடுகளின்றி மக்களுக்கு சேவைகளை நாம் மேற்கொள்வோம்

### வேட்பாளர் காலீதீன் மனாசீர் உறுதி

(பாறுக் ஷிஹான்)




நாவிதன்வெளி பிரதேச சபைக்கு இனிவரும் காலங்களில்இனபாகுபாடுகள்இன்றி மக்களுக்கு சேவைகள் மேற்கொள்வோம் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.இதனூடாக எமது சமுதாயத்துக்கு தேவையான சேவைகளை பூர்த்திசெய்வோம் எனநாவிதன்வெளி பிரதேச சபை தேர்தலில் மோட்டார் சைக்கிள் சின்னம் சுயேச்சைக் குழு இலக்கம் -2 இல் போட்டியிடும் வேட்பாளர் காலீதீன் மனாசீர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் நாவிதன் வெளி பிரதேச சபைகளுக்காக சுயேட்சைக்குழு இலக்கம் -2 இல் மோட்டார் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுபவர்கள்நடத்தியவிசேடசெய்தியாளர் சந்திப்பு இன்று அம்பாறை மாவட்டம் சாளம்பைக்கேணி பகுதி அலுவலகத்தில் நடைபெற்றவேளை அங்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

நாவிதன்வெளி பிரதேச சபைக்கு எதிர்வரும் காலங்களில் மோட்டார் சைக்கிள் சின்னம் சுயேச்சைக் குழு இலக்கம் -2 இல் போட்டியிடும் நாங்கள் தெரிவு செய்யும் பட்சத்தில் அப்பிரதேசசபையில்இடம்பெறுகின்ற இன மத அடிப்படையிலான சில விடயங்களை மாற்றுவோம். அதாவது இன மத வேறுபாடு இல்லாமல் அனைத்து சமூகங்களுக்கும் சேவை செய்யக் கூடியதாக எங்களது சமூகப் பணியை முன்னெடுப்போம்.

கடந்த காலங்களில் இந்த சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் தங்களது வட்டாரங்களை சேர்ந்தவர்களுக்கும் வட்டாரங்களுக்கும்தான் அவர்களது பணியை முன்னெடுத்தார்கள்.ஆனால் நாங்கள் அவ்வாறு இருக்கப் போவதில்லை.நாங்கள் இன மத பாகுபாடின்றி

அனைத்து சமுதாயங்களுக்கும் எமது சேவைகளை மேற்கொள்வோம்.

கடந்த காலங்களில் இப்பிரதேச சபையில்பாகுபாடுகள்கூடிய பல்வேறு விடயங்கள் இடம்பெற்றிருந்தன. அதாவது தமிழ் சமூகம் முஸ்லிம் சமூகங்கள் என்ற பாகுபாடு பார்த்து சேவைகள் செய்யப்பட்டன. நாங்கள் சபையை கைப்பற்றினால் சபை நடவடிக்கையில் இவ்வாறான பாகுபாடுகள் இன்றி மக்களுக்கு சேவைகளை மேற்கொள்வோம் என்பதை இவ்விடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். இதனூடாக எமது சமுதாயத்துக்கு தேவையான சேவைகளை பூர்த்தி செய்வோம். - என்றார்.

## அனுரவின் வருகையை முன்னிட்டு பொலிஸார் கோரிய தடையுத்தரவை நிராகரித்த நீதிமன்று!

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்காவின் வருகையை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள தடையுத்தரவு கோரிய வவுனியா பொலிஸாரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிஅனுரகுமாரதிஸநாயக்கா இன்று (சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்திற்கு வருகை தரவுள்ள நிலையில் அங்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தரவுள்ளனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க பிரதிநிதிகளால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளதாகவும், அவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் எனவும் தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு தடையுத்தரவு கோரியிருந்தனர்.

இதனை கவனத்தில் எடுத்த மன்று, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வது மக்களின் ஜனநாயக உரிமை. அதனை தடுக்க முடியாது. ஆனால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் யாராவது செயற்பட்டால் பொலிஸார் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்து தடையுத்தரவு கோரிக்கையை மன்று நிராகரித்திருந்தது.
100

## ஆலையடிவேம்பில் தமிழரசு தேர்தல் காரியாலயம் திறந்து வைப்பு

( வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான ஆலையடிவேம்பு 4ஆம் வட்டாரத்துக்கான வேட்பாளர் சா.ஸ்ரீஸ்கந்தராஜாவின் பிரச்சாரக் காரியாலயம்(23) புதன்கிழமை மாலை ஆலையடிவேம்பு வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்லில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்கோடீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு கிளைத் தலைவர் எம்.ஜெகநாதன்( குமார்) கலந்து சிறப்பித்தார்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கு



போட்டியிடுகின்ற வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்



## ஜேவிபியினர்தான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாலும் இனவாத்த்தை ஜேவிபியினரே வெளிப்படுத்துகின்றனர் அவர்களே உண்மையான இனவாதிகள்.

இத்தகைய பௌத்த சிங்கள பேரினவாதிகளுக்கு இத்தேர்தலில் சந்தர்ப்பத்தை வழங்கினால் அது தமிழ் மக்களுக்கே பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். எனவே மக்கள் விழிப்புடன் இருந்து தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற எங்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கொடூரமானவர் இனவாதி என்பதெல்லாம் தமிழ் மக்களுக்கு தெரிந்திருந்தாலும் அவரைப் பற்றி அறிந்து கொள்வதற்கு சிங்கள மக்களுக்கே இரண்டு வருடங்கள் எடுத்திருந்தன. ஆனால் பல்வேறு கதைகளைக் கூறி ஆட்சிக்கு வந்த இன்றைய ஜனாதிபதி அநுர குமார தான் வழங்கிய வாக்குறுதிகளையே நிறைவேற்ற முடியாதவராக தன்னுடையதும் தமது கட்சியினதும் உண்மை முகத்தை 6 மாதங்களிலேயே வெளிப்படுத்தி வருகின்றார். எனவே ஜேவிபியின் உண்மையான முகத்தை இப்பவேனும் அறிந்து கொண்டுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் நிமானமாகச் சிந்தித்து எதிர்காலத்தில் உங்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என கோருகிறேன் - என்றார்.

## இந்திய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது 26 பேரின் உயிரைப் பறித்த தாக்குதலை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க கடுமையாகக் கண்டித்தார்.

தாக்குதலை அறிந்து தான் மிகவும் அதிர்ச்சியடைந்தார் எனக் கூறிய ஜனாதிபதி, இந்திய மக்களுடன் இலங்கை எப்போதும் சகோதரத்துவத்தால் பிணைக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இந்த காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கை ஆளும்தரப்பினதும் மக்களினதும் இரங்கலைத் தெரிவித்தார் ஜனாதிபதி.

தற்போதைய சூழ்நிலையால் உருவாகியுள்ள பதற்றமான சூழ்நிலை விரைவாகத் தீர்க்கப்பட்டு பிராந்திய அமைதி நிலைநாட்டப்படுவதைக் காண்பதே இலங்கையின் நம்பிக்கை என்றும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

## இளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வத்தைக் கண்டித்து, பத்திரிகை சுதந்திரத்தின் மீதான தாக்குதல் மற்றும் நீதியைத் தடுத்தல் எனக் கூறி அரச தகவல் திணைக்களத்தில் முறைப்பாடளித்தது.

முறைப்பாட்டைத் தொடர்ந்து, அரச தகவல் திணைக்கள இயக்குநர் ஜெனரல் பண்டாரா, சம்பவம் குறித்து முழு விசாரணை நடத்தக் கோரி பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஊடகங்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வருண தீப்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்த தாவது:

தேர்தல் பரப்புரை மேடைகளில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொய் கூறுவது மாத்திரமின்றி, அச்சுறுத்தல்களையும் விடுக்கின்றார். இவை மாத்திரமின்றி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பழைய கதைகளையும் தேடுகின்றார்.

அதற்கமைய மன்னார் மற்றும் யாழ்ப்பாணத்தில் அந்த மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி கூறிய விடயங்கள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்களாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணிலின் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பது மாத்திரமின்றி, கடந்த காலங்களில் அவர் கூறியவற்றையும் தற்போதைய ஜனாதிபதி மீளக் கூற ஆரம்பித்திருக்கின்றார். தற்போது அநுரகுமார திஸாநாயக்க, அநுர விக்கிரமசிங்கவாகியிருக்கின்றார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமக்கு வாக்களிக்காவிட்டால் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட மாட்டாது என ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார்.

நாட்டில் பொறுப்புள்ள எந்தவொரு அரசியல்வாதியும் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதில்லை. கடந்த ஆட்சிக் காலத்தில் திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பி. கைப்பற்றியது. ஆனால் ஐக்கிய தேசிய கட்சி ஆளும்தரப்போ, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆளும்தரப்போ திஸ்ஸமகாராம பிரதேச சபையை ஜே.வி.பியின் சபையாகக் கருதவில்லை. ஏனைய பிரதேச சபைகளைப் போன்றே அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டது. எனவே தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறாத உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கப்படாது என ஜனாதிபதி குறிப்பிடுவது ஒழுக்கத்துக்கு முரணானதாகும்.

இது தொடர்பில் செய்திகளை வெளியிடும் ஊடகங்களையும் ஜனாதிபதி அச்சுறுத்துகின்றார். ஜனாதிபதியால் தெரிவிக்கப்படும் இந்த கருத்துக்கள் முற்றுமுழுதாக தேர்தல் சட்டத்துக்கு முரணானதாகும் என்றார்.

## தேசபந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பேர் கொண்ட குழு, நேற்று இரண்டாவது நாளாக நாடாளுமன்ற வளாகத்தில் கூடியது. விசாரணையை எவ்வாறு நடத்துவது மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினரை எவ்வாறு விசாரணையில் ஈடுபடுத்துவது என்பது குறித்தும் குழு நேற்று விவாதித்தது.

எதிர்கால நடவடிக்கை குறித்து முடிவுகளை எடுக்க, ஏப்ரல் 28 திங்கட்கிழமை மீண்டும் கூடவும் குழு முடிவு செய்துள்ளது.

அதேநேரம் தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைக்கு உதவுவதற்காக ஒரு பொலிஸ் புலனாய்வுக் குழுவை நியமிக்குமாறும் பதில் பொலிஸ் மா அதிபருக்குக் குழு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, மூவர் விசாரணைக் குழுவின் பணிகளுக்காக நாடாளுமன்ற வளாகத்தில் அமைச்சர்களுக்கான அறைகளில் ஓர் அறை ஒதுக்கப்பட்டுள்ளது. குழுவின் உறுப்பினர்கள் அங்கிருந்து தங்கள் விசாரணையை மேற்கொள்ள உள்ளனர்.

இந்தக் குழுவில் உச்ச நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன முன்னாள் நீதிபதி நீல் இத்தவல மற்றும் தேசிய காவல் ஆணையத்தின் தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோர் உள்ளனர்.

தேசபந்து தென்னகோன் மீதான குற்றச்சாட்டுகளை விசாரித்த பின்னர், குழு அதன் இறுதி விசாரணை அறிக்கையை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கும். அதன் பிறகு தேசபந்துவைப் பதவி நீக்கம் செய்வதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

## இணைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையவே, யாழ்ப்பாணத்தில் இணையக் குற்றவிசாரணைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

## காணி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தணிக்கை அறிக்கை பல தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது. கூடுதலாக, ஸ்ரீ ஜெயவர்தனபுர மருத்துவமனை மற்றும் சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தலைவர்களும் எதிர்காலத்தில் குழுவின் முன் வரவழைக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில், அரச நிறுவனங்கள் தொடர்பான தனித்தனி விரிவான அறிக்கைகள் எதிர்கப்லத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று கோப் தலைவர் கூறினார். சட்ட நடவடிக்கை எடுப்பதை எளிதாக்குவதைக் கருத்தில் கொண்டு இது செய்யப்படுகிறது.

## தலதா ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலதா மாளிகை யாத்திரைக்காக மாத்தளை பகுதியிலிருந்து வரும் பக்தர்களை கண்காணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒரு பொலிஸ் சார்ஜன்ட்டும், கடுகண்ணாவ பகுதியில் மற்றொரு சார்ஜன்டும் உயிரிழந்தனர் என்று மனதுங்க தெரிவித்தார்.

## 5ஆம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அறிக்கை எச்சரிக்கின்றது.

இலங்கையின் மீதான தாக்கத்தை மதிப்பிடுவதற்கும், நாணய நிதியத்தின் நிதித் திட்டத்தின் அளவுருக்களுக்குள் அந்த தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்கான கொள்கைப் பதில்களைத் தயாரிப்பதற்கும் இலங்கை அதிகாரிகளும் நாணய நிதிய ஊழியர்களும் இணைந்து செயல்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குவியும் பக்தர்கள் திணறுகிறது கண்டி

கண்டி, தலதா மாளிகைக்கான யாத்திரை நாளை திட்டமிட்டபடி நிறைவடையும் என்று தியவதன நிலமே நீலங்கடேல நேற்றுத் தெரிவித்தார். தொடர்ந்து 10 நாட்களாக இடம்பெற்-றுவரும் இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக நாடு முழுவதும் இருந்து கண்டியில் குவியும் மக்களால் நகரம் சமாளிக்க முடியாத வகையில் திணறி வருகின்றது. ஏற்கனவே அளவுக்கு மீறிய பக்தர்களின் வருகை காரணமாக இனி வரவேண்டாம் என்றும் அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இது குறித்து தியவதான நிலமே தெரிவித்ததாவது:

யாத்திரைக்காக தினசரி திட்டமிடப்பட்ட எண்ணிக்கையைவிட அதிகமான பக்தர்கள் வந்துள்ளனர். யாத்திரையின் எட்டாவது நாளான வெள்ளிக்கிழமை கண்டி நகரம் அதிக எண்ணிக்கையிலான பக்தர்களால் நிரம்பியிருந்தது. பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால், வழிபடுவதற்கான நேரம் குறைவாக உள்ளது. தற்போது, கண்டியைச் சுற்றி அதிக எண்ணிக்கையிலான மக்கள் தங்கியிருப்பதால், சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார அடிப்படை வசதிகளை வழங்குவது பெரும் சவாலாக உள்ளது.

இலங்கை காவல்துறை, இராணுவம், சுகாதாரத் துறை, நகராட்சி மன்றம் மற்றும் மத்திய மாகாண சபை ஆகியவை சிறந்த சேவையை வழங்கி வருகின்றன. நாங்கள் அதைப் பாராட்டுகிறோம். அம்பிட்டிய வீதி மற்றும் கட்டுகஸ்தோட்டை வீதிப் பகுதிகளில் தற்போது பெரும் கூட்டம் கூடிவருகிறது. அந்தப் பகுதிகளிலுள்ள மக்களும் வர்த்தக சமூகமும் சிறந்த சேவையை வழங்கியுள்ளது. அவர்களின் சேவையையும் நாங்கள் பாராட்டுகிறோம்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (24) கண்டிக்கு நேரில் சென்று மல்வத்த-அஸ்கிரிய மகாநாயக்க தேரர் மற்றும் தியவதன நிலமே ஆகியோரைச் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்படி, முன்னரே திட்டமிடப்பட்டபடி தலதா மாளிகைக்கான யாத்திரையை ஏப்ரல் 27 முடிவுறுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது - என்றார்.

# பாப்பரசருக்கு அஞ்சலி செலுத்த எதிர்க் கட்சி எம்.பிக்கள் பயணம்

புனித திருத்தந்தை பிரான்சிஸுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக சமகி ஜன பலவேகய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கவிந்த ஜெயவர்தன மற்றும் ஹெக்டர் அப்புஹாமி ஆகியோர் வத்திக்கானுக்குச் சென்றுள்ளனர்.

இலங்கையில் வாழும் 22 மில்லியன் மக்களின் சார்பாக திருத்தந்தைக்கு அஞ்சலி செலுத்துவதாக நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜெயவர்தன வத்திக்கானில் இருந்து ஊடகங்களுக்கு அளித்த அறிக்கையில் தெரிவித்தார்.

மறைந்த பாப்பரசர் இலங்கையர்கள் மீது மிகுந்த மரியாதையுடன் செயல்பட்டார் எனவும் அவர் கூறினார். ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்குப் பிறகு திருத்தந்தை இலங்கைக்காக பிரார்த்தனை செய்திருந்தார் எனவும் கவிந்த மேலும் தெரிவித்திருந்தார்.

மறைந்த போப் பிரான்சிஸின் இறுதிச் சடங்குப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதற்காக அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று வத்திக்கானுக்குப் புறப்பட்டார்.

அவர் எதிஹாட் ஏர்வேஸ் சிகூஃ-393 விமானத்தில் அபுதாபிக்குச் சென்று அங்கிருந்து மற்றொரு விமானத்தில் வத்திக்கான் சென்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக கல்முனைக்கு பயணம்

(பாறுக் ஷிஹான்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக தலைமையிலான உயர் மட்டக் குழுவினர் கல்முனை மனித உரிமைகள் பிராந்திய நிலையத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் நெறிப்படுத்தலில் குழுக் கலந்துரையாடல்கள் நேற்று இடம்பெற்றன. இக்கலந்துரையாடலின் போது ஆணைக்குழுவின் சர்வதேச உறவுகளுக்கான பணிப்பாளர் க. கபிலன் வில்லவராஜன் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட உத்தியோகத்தர் ஏ.டபிள்யு.எம். அஹமட் ஆகியோர் பங்கேற்றனர்.

வலிந்து காணாமல் போன, தமிழ் முஸ்லிம் உறவினர்களின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கைகளை முன்வைத்தனர். இக்குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்ககின்ற பாதுகாப்புப் பிரச்சினைகள் சட்ட ரீதியாகவுள்ள உரிமைகள் பற்றியும் இதனை பிரயோகிக்கின்ற போது ஏற்படுகின்ற சவால்கள் பற்றியும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இது தவிர சிவில் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது தற்போதைய சூழழில் சிவில் அமைப்புக்கள் செயற்படுவதால் ஏற்படும் சவால்கள் அண்மையில் நடந்து கொண்டிருக்கும் மனித உரிமை மீறல்கள் பற்றியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுவதற்கான பொறிமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கல்முனை பிராந்திய பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது தமிழ்மொழிப் பிரயோகத்தின் அவசியம் பற்றியும் பாதிக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு வருகின்ற பொதுமக்களுக்கான விரைவான பரிகாரங்கள் மற்றும் வழக்கு நடைமுறையிலுள்ள சவால்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. விசேட கலந்துரையாடலின் போது கல்முனைப் பிராந்தியத்தில் காணப்படுகின்ற பொதுவான முரண்பாடுகள் பற்றி வேறு தனிக்குழுக் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

இக்கலந்துரையாடலின் போது அம்பாறை மாவட்டத்தில் கரும்பு விவசாயிகளின் உணவுப் பாதுகாப்பு மற்றும் காணி உரிமை சம்பந்தமாகவும் நுரைச்சோலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சுனாமி வீடமைப்புத் திட்டம் மக்களிடம் இருபது வருடங்களுக்கு மேலாக கையளிக்கப்படாமை பற்றியும் காதி நீதிமன்றங்களின் அமர்வுகளின் போது பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் இருக்காமையால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இதற்கு மேலதிகமாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக ரீதியான




பிரச்சினைகள் பற்றியும் அதனால் பொதுமக்கள் எதிர்நோக்கும் நிர்வாகக் குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

மேற்படி மக்களின் கோரிக்கைகளை ஆணைக்குழு உரிய கவனமெடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையாளர் கலாநிதி ஜெகான் குணதிலக கூறினார்.








காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்று சேராத காரணத்தால்தான் இந்த அவலம்

## யெஹியா எம். இப்ளார் கூறுகிறார்

(இரவீந்திரன்)



ஐக்கிய தேசிய கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்று சேராத காரணத்தால் நாட்டிலுள்ள கிராமிய மற்றும் சிறுபான்மையின மக்களும் சிறுபான்மையின கட்சிகளும் சொல்லொனா துயரங்களை அனுபவித்து வருகின்றன. என்று சபரகமுவ மாகாண சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் உறுப்பினர் யெஹியா எம். இப்ளார். - கூறினார்.

இரத்தினபுரி நகரிலுள்ள அவரது காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் கூறியதாவது -

கடந்த வருடம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது ;இக்கட்சிகள் இரண்டும் ஒன்றாக இணைந்து தேர்தலில் ஒரே குழுவில் போட்டியிடும் என்று பெரும்பாலான நாட்டு மக்கள் எதிர்ப்பார்த்தனர். ஆனால் அவை நடைமுறையில் சாத்தியப்படவில்லை.

அதன் பின்னர் பொது தேர்தலிலாவது இக்கட்சிகள் இரண்டும் ஒன்றிணைந்து ஒரே அணியாக போட்டியிடும் என்று எதிர்ப் பார்த்தனர். அதுவும் சாத்தியப்படவில்லை. இதனால் இன்று நாட்டின் ஆட்சியதிகாரம் மக்கள் விடுதலை முன்னணி சார்பு தேசிய மக்கள் சக்தியிடம் போய் விட்டது.

இதனால் நாட்டு மக்களிடையே குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்கள் ஒருவித அச்ச உணர்வுடனேயே உள்ளனர். இந்த தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் சிறுபான்மையினத்தை சோந்தநாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டவர்கள் கூட இன்று திரிசங்கு நிலையில் உள்ளனர். அவர்களால் தனித்து தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எவ்வித சேவைகளையும் செய்ய முடியாது கைகட்டி பொம்மையாகவுள்ளனர்.

இதன் காரணமாக இந்த தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் கூட சிறுபான்மையின மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை.

இலங்கை வாழ் மக்கள் அனைவரும் ஒரே தாய் மக்கள் அவர்கள்; அனைவரும் இலங்கையர்கள் என்று கூறுகின்றது. ஆனால் நடைமுறையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அனைத்தும் சிறுபான்மையின மக்களுக்கு எதிராகவே உள்ளது.

குறிப்பாக பௌத்த மதத்தை முன்னிறுத்தியே அரசாங்கத்தின் செயற்பாடுகள் உள்ளன. நாட்டிலுள்ள சகல மதங்களின் விவகாரங்களையும் நாட்டு மக்களான தமிழ், சிங்களம், முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து மக்களின் மத விவகாரங்களை கவனிப்பதற்கென அமைக்கப்பட்ட அமைச்சானது புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள அனைத்தின மக்களும் ஒரே தாய் மக்கள் என்றால் அவர்களுக்கு சேவை செய்யவென அமைக்கப்பட்ட அமைச்சு எதற்காக புத்தசாசன அமைச்சு என்று பெயரிடப்பட வேண்டும்.

கடந்த கால ஆட்சியின் தவறை திருத்துவதாக கூறும் அரசாங்கம் புத்தசாசன அமைச்சுக்கு பதிலாக மத விவகார அமைச்சு என்று பெயரிட முடியாது உள்ளது. அவ்வாறு மாற்றினால் நாட்டில என்ன நடக்கும் என்பது நான் கூற வேண்டியதில்லை.

அரசாங்கம் சிறுபர்மை மக்களான தமிழ் முஸ்லிம் மக்களை திட்டமிட்டு ஏமாற்றி வருகின்றது. ஸ்டார் தாக்குதல் குறித்து அரசாங்கத்தின் போக்கும் எமக்கு இதனையே காட்டுகின்றது. அது குறித்து அரசாங்கம் அவ்வப்போது வெளியிடும் தகவல்களும் அறிக்கைகளும் ஒன்றுக்கு ஒன்று முரணாகவே உள்ளது.

இந்த அரசாங்கத்தின் ஆறுமாத ஆட்சியில் மக்கள் விரக்தியின் எல்லைக்கே சென்று விட்டனர். குறிப்பாக கிராமிய மற்றும் தமிழ் முஸ்லிம் மக்கள் இன்று தமது எதிர்காலம் குறித்து அச்சம் கொள்கின்றனர்.

அரசாங்கம்; சிறுபான்மையின மக்கள் குறித்து காலையில் ஒன்று கூறினால் மாலையில் அதனை வேறு விதமாக கூறுகின்றது.

இரத்தினபுரி நகரத்தின் பெரும் பகுதி ஏற்கனவே கைவிடப்பட்ட களனிவெளி ரயில் பாதையிலே அமைந்துள்ளது. இப்பாதையில் பெரும் எண்ணிக்கையான அதாவது நூற்றுக்கணக்கான கடைகளும் வர்த்தக நிலையங்களும் மற்றும் வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைக்கப்பட்ட கட்டடங்கள் பெரும்பாலும் பலமாடிகள்;கொண்டவைகள் சிறுபான்மையின மக்களுக்கு சொந்தமான பல கோடிகள் பெறுமதியானவைகள் இந்த கைவிடப்பட்ட, களனிவெளி ரயில் பாதையை அவிசாவெளையிலிருந்து இரத்தினபுரி நகரினூடாக தென்பகுதிவரை கொண்டு செல்வதாக அரசாங்கம் தற்போது அடிக்கடி கூறி வருகின்றது.

அவ்வாறு ரயில் பாதை அமைக்கப்பட்டால் இப்பாதையில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள், கடைகள் என்பன 24 மணித்தியாலயங்களுக்குள் அகற்றப்பவேண்டும். அவ்வாறு அகற்றப்பட்டால் எமது மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டும். - என்றார்.

# களுதாவளை கெனடி விளையாட்டு கழகம் சம்பியனாகத் தெரிவானது

(சக்திவேல்)





மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா 2025 அண்மையில் களுதாவளை கெனடி விளையாட்டு கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதில் குழுநிலை, மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளின் அடிப்படையில் களுதாவளை கெனடி விளையாட்டுக் கழகம் இம்முறை பிரதேச மட்டத்தில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

குழுநிலை போட்டிகளில் முதலாம் இடத்தை கிரிக்கெட் - ஆண்கள், எல்லே - ஆண்கள், எல்லே - பெண்கள், கபடி - பெண்கள், வலைப்பந்து - பெண்கள், கரபந்து - பெண்கள் என 06 தங்கப்பதக்கத்துடன், கிரிக்கெட் - பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளது.

மெய்வல்லுனர் போட்டிகளில் இதுவரை காலமும் இல்லாத வகையில் அதிக பதக்கங்களை பெற்றுள்ளது. அந்த வஷ்கியல் 30 தங்கப்பதக்கமும், 20 வெள்ளிப்பதக்கமும், 20 வெண்கலப்பதக்கமும் அடங்கலாக 70 பதக்கங்களை வென்றுள்ளது.

குறிப்பாக இம்முறை கெனடி பெண்கள் அஞ்சல் அணியினர் இரண்டு அஞ்சல் போட்டிகளிலும் வெற்றிவகை சூடியுள்ளனர்.

பிரதேச மட்டத்தில் இரண்டாம் இடத்தை செட்டிபாளையம் நியூட்டன் விளையாட்டு கழகம் பெற்றுள்ளது.

அக்கழகம் 06 தங்கப்பக்கங்களுடன், 10 வெள்ளிப்பதக்கம்,

03 வெண்கலப் பதக்கம் என 19 பதக்கங்களை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தோடு ஆண்கள் பிரிவில் சம்பியன்ஸாக கெனடி விளையாட்டு கழகத்தின் வீரர்களான தி.குகப்பிரியன் (200,400,800 மீற்றர்),

நி.தருண் (1500,5000,10000 மீற்றர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேபோல் பெண்கள் பிரிவில் நியூட்டன் கழக ஜீ.வாசனாஞ்சலி (400,800,1500 மீற்றர்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



# தனியாருக்கு வழங்கிய திக்கம் வடிசாலையை பனை வளச் சங்கங்களிடம் வழங்கத் தீர்மானம்

(சுபேசன்)

கடந்த அரசாங்கத்தால் முறைகேடான விதத்தில்தனியாருக்குதாரைவார்க்கப்பட்ட திக்கம்வடிசாலையைமீளவும்அந்தந்தபனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களிடமும்- தொழில்துறை சார்ந்தவர்களிடமும் வழங்க பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது.



மேற்படி மகிழ்ச்சிகரமான தீர்மானத்தை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களுக்கு தெரியப்படுத்தும் முகமாகவும் -திட்டமிட்டு மறைக்கப்பட்ட திக்கம் வடிசாலையின் பெருமையை இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ள ஏதுவாகவும் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வி.சகாதேவன் கைதடியில் அமைந்துள்ள பனை அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் இருந்து திக்கம் வடிசாலை வரை விழிப்புணர்வு நடைபயணம் ஒன்றை முன்னெடுத்திருந்தார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபையின்தலைவர்வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்; -

25வருட காலமாக திக்கம் வடிசாலை விவகாரம் பேசு பொருளாகவும் - அரசியல் மயப்படுத்துப்பட்டும் இருந்து வருகின்றது.

இன்று உள்ள இளம்தலைமுறைக்கு திக்கம் என்றால் என்னவென்று தெரியாமல் மறைக்கப்பட்டு ஒரு சமுதாயத்தினுடைய எழுச்சி ஒடுக்கப்பட்டுள்ளது. திக்கம் வடிசாலை விவகாரம் மக்கள் மயப்படுத்தப்பட்டு 25 வருடங்கள் கடந்துவிட்டன. கடந்த காலங்களில் உரிய தீர்வுகள் எவையும் எட்டப்படவில்லை.

இன்று திக்கம் வடிசாலையை மீள இயக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கும் போது அதன் சொத்தாக பழைய போத்தல் மூடிகளும் - எஞ்சியுள்ள ஸ்டிக்கர்களும் மாத்திரமே உள்ளன.

அதனை விட கவலைக்குரிய விடயம் கடந்த காலத்தில் முறைகேடான ஒப்பந்தம் ஊடாக பனை அபிவிருத்திச்சபை நிர்வாகத்தால் திக்கம் வடிசாலை தனியாருக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது.

சமுதாயத்திற்கு கிடைக்க வேண்டிய நன்மை அடுத்த சில தசாப்தங்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டு தனியாருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட பின்னர் பனை அபிவிருத்திச்சபையின் பணிப்பாளர்சபை திக்கம் வடிசாலையை மீளவும் அந்தந்த சங்கங்களுக்கும் -தொழிற்துறை சார்ந்தவர்களுக்கும் வழங்குவதென ஒரு தீர்க்கமான முடிவினை கடந்த சில நாள்களுக்கு முன்னர் எடுத்துள்ளது.

கடந்த 2000ஆம் ஆண்டு திக்கம் வடிசாலையை இயக்குவது இலகுவாக இருந்தது. ஆனால் இன்று அவ்வாறு இல்லை. பல சவால்கள் உள்ளன. பல சட்டச்சிக்கல்கள் உள்ளன.

திக்கம் வடிசாலையை தனியாருக்கு வழங்கிய ஒப்பந்தத்தில் உள்ள தவறான விடயங்களை அணுகி - உரிய ஆலோசனை பெற்றுபணிப்பாளர்சபைஅந்தஒப்பந்தத்தை இரத்துச் செய்துள்ளது.

அந்த நல்ல செய்தியை வடமராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச்சங்கங்களின் கொத்தணியிடம் தெரியப்படுத்தவே இந்த நடைபயணம் மேற்கொள்ளப்படுகின்றது.

அத்துடன் இன்றைய தலைமுறைக்கு திக்கம் என்றால் என்னவென்று தெரியாது. மிக முக்கியமாக திக்கம் வடிசாலையை நம்பியுள்ள தொழிலாளர்கள் மீளவும் எழுச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காகஇந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கின்றோம்.

கடந்த காலத்தில் வடமாகாணத்தின் பிரதான வருவாயை ஈட்டித்தரும் வருமான மார்க்கமாக திக்கம் வடிசாலை இருந்தது. 15ஆயிரம் தொழிலாளர்கள் வரை தொழிலில் ஈடுபட்டனர். இன்று அந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை லட்சங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனால் அந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கைசிலநூற்றுக்கணக்காக சுருங்கிவிட்டமை கவலைக்குரிய விடயம்.



நாம்கடந்ததைப்பூசதினத்தன்று திக்கம் வடிசாலையை மீள திறப்பதாகஉறுதியளித்திருந்தோம். இருப்பினும் சில நிர்வாக ரீதியான நடைமுறைகள் மற்றும் சட்டச் சிக்கல் காரணமாக சற்று தாமதமாகியுள்ளது. மேலும் நாம் சில சட்டரீதியான விடயங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதற்கு மக்களுடையதும் - கொத்தணிகளுடையதும் ஒத்துழைப்புநிச்சயமாகஇருக்கும் என எதிர்பார்க்கிறேன். - என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.




# விளையாட்டுக் கழகங்களுடன் சந்திப்பு அட்டாளைச்சேனையில்

(ஸாகிர்)

அட்டாளைச்சேனை விளையாட்டுக்கழக அங்கத்தவர்களுடனான சந்திப்பு வியாழக்கிழமை அட்டாளைச்சேனையில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை ப்ரண்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில், அவ்விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுடனான சந்திப்பும், அட்டாளைச்சேனை மார்க்ஸ் மென் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில், அவ்விளையாட்டுக் கழக அங்கத்தவர்களுடனான சந்திப்பும் அந்தந்த கழகத் தலைவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வுகளில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச செயலகங்களின் அபிவிருத்தி குழு தலைவருமான அபூபக்கர் ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

மேலும் தேசிய மக்கள் சக்தியின் அட்டாளைச்சேனை பிரதேச அமைப்பாளர் ரியாஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயற்பாட்டாளர்கள், அட்டாளைச்சேனை பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து நிகழ்வுகளில் கொண்டனர்.





# 20 கிலோ கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது!

சிறப்பு அதிரடிப்படையினருக்கு நேற்று கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி தர்மபுர பொலீஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரமந்னாறு பகுதியில் வீடொன்றில் நேற்று அதிகாலைவேறு பகுதியில் இருந்து எடுத்துவரப்பட்டுமறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 20 கிலோ கேரளா கஞ்சாவை சிறப்பு அதிரடி படையினர் கைப்பற்றி உள்ளர்.

அந்த வீட்டு உரிமையாளரான பெண் ஒருவரையும் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மற்றும் தடையப் பொருள்கள் அன்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த தர்மபுர பொலீஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். 113

காலைக்கதிர் Kalaikkathir

# தென்கிழக்கு பல்கலையில் இந்து- ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் தொடர்பான செயலமர்வு

(நூருல் ஹுதா உமர்)

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் மொழித் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்து- ஸ்ரீலங்கா உருதுக் கவிதைகள் தொடர்பான செயலமர்வொன்று மொழித் துறைத் தலைவர் கலாநிதி ஏ. விக்கிரமரத்ன தலைமையில் பீடத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்றது.

மொழிகள் தொடர்பான விரிவுரையாளர்கள் மாணவர்கள் பங்குகொண்டிருந்த இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் கலந்து கொண்டார்.



நிகழ்வுக்கு இந்தியாவில் இருந்து வருகைதந்திருந்த இந்திய உருதுக் கவிஞர் மற்றும் பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் விஷேட பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

நிகழ்வின்போது பீடாதிபதி உள்ளிட்ட பல்கலைக்கழக சமூகத்தினரால் விஷேட பேச்சாளர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

அதேவேளை பேராசிரியர் முஹமத் மசூத் அஹமத் பல்கலைக்கழக நூலகத்துக்கு ஒரு பகுதி நூல்களை பீடாதிபதியிடம் ஒப்படைத்தார்.

பேராசிரயரோடுஇணைந்துசபுத்திஅமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலில், பேராசிரியர் எம்.ஏ.எஸ்.எவ். சாதியா, சிரேஷ்ட விரிவுரையாளர்களான என். சுபராஜ், கே.ஆர். பாத்திமா சீபா, விரிவுரையாளர் ஏ. அப்துல் ரஸ்ஸாக் உள்ளிட்டவர்களுடன் மாணவர்களும் பங்கு கொண்டிருந்தனர்.








உங்கள் கனவை நனவாக்க ...!

NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



●CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)

●NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்

இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:

●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்

●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு

●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD

JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.

தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# தடைசெய்யப்பட்ட இறக்குமதிகள் தற்போது பல கோணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவிப்பு

ஒரு சிறப்பான ஒரு நேர்த்தியான ஆட்சியை நாங்கள் நடத்தி வருகின்றோம், அதுபோல் இதுவரை காலமும் தடை செய்யப்பட்டிருந்த இறக்குமதிகள் பல கோணங்களில் தற்போது ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன.

என வெளி விவகார பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் கட்சியின் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில்





போட்டியிடும் களுதாவளை வட்டார வேட்பாளர் தேர்தல் அலுவலகம் நேற்றைய தினம் (வெள்ளிக்கிழமை) வெளிவிவகார பிரதி அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான அருண் ஹேமசந்திரா மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவால் திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது கருத்தரிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிப் பிரதிநிதிகள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.










இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2025இல் வெளியிடப்பெற்றது